முதன்மை மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை.

**முன்னிலை: திருமதி K.அறிவொளி, M.A., M.L.,**

முதன்மை மாவட்ட நீதிபதி, சிவகங்கை.

2026-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 11-ம் நாள் செவ்வாய் கிழமை

இடைநிலை மனு எண்.1/2026 இன் அசல் வழக்கு எண்.94/2023

* * * * *

S.கோபால் . . . மனுதாரர்/ பிரதிவாதி

/ எதிர் /

N.ராமநாதன் . . . எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு இந்நீதிமன்றத்தில் 05.08.2026-ம் தேதி என் முன்பாக இறுதிவிசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.K.செல்வம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.P.S.நாகராஜன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த நிலையில் இன்று நீதிமன்றம் வழங்கும்...

## உ த் த ர வு

மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை தன் தரப்பு கூடுதல் ஆவணங்களாக ஏற்றுக்கொள்ள உத்தரவிடக் கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 8 விதி 1A(3) மற்றும் பிரிவு 151-ன் கீழ் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:-**

மனுதாரர்/பிரதிவாதி, எதிர்மனுதாரர்/வாதி தனக்கு எதிராக பணம்

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.08.11 18:04:12 +0530

செலுத்தக் கோரி பொய்யான சங்கதிகளை கூறி அசல் வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றும், தற்போது அசல் வழக்கானது மனுதாரர்/பிரதிவாதி தரப்பு சாட்சியத்திற்காக வாய்தா ஏற்பட்டுள்ளது என்றும், தான் தனது தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்தபோது கூடுதல் ஆவணங்கள் தனது கைவசம் இல்லாத காரணத்தாலும், தான் தேடியபோது கிடைக்காத சூழ்நிலையிலும் மேற்படி ஆவணங்களை தன்னால் இணைத்து தாக்கல் செய்ய இயலவில்லை என்றும், இம்மனுவை அனுமதிப்பதில் எதிர்மனுதாரர்/வாதிக்கு எந்தவித ஆட்சேபனையும் இருக்க வாய்ப்பில்லை என்றும், எனவே மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை தன் தரப்பு கூடுதல் ஆவணங்களாக ஏற்றுக்கொள்ள உத்தரவிடக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) <u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:-</u>**

தாவா மனுவில் கண்டுள்ள சங்கதிகளில் வெளிப்படையாக ஒத்துக்கொள்ளும் சங்கதிகள் தவிர ஏனைய சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்கக் கடமைப்பட்டவர் என்றும், மனுதாரர்/பிரதிவாதி கடந்த 2023-ம் வருடம் நவம்பர் மாதத்தில் தாக்கல் செய்த எதிர்வழக்குரையுடன் எந்தவொரு ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றும், தற்போது மனுதாரர்/பிரதிவாதி இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள 1-வது ஆவணமானது தமிழ்நாடு விற்பனை வரி பதிவுச் சான்றிதழ் என்றும், மேற்படி பதிவுச் சான்றிதழானது கடந்த 2007-ம் வருடம் M.P.K.Polymers என்ற பெயரில் பதிவு செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழ் என்றும், மேற்படி M.P.K.Polymers-க்கும் இவ்வழக்கின் வாதி மற்றும் பிரதிவாதிக்குமிடையே

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.08.11 18:04:21 +0530

எந்தவித சம்பந்தமும் கிடையாது என்றும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள 2-வது ஆவணமானது M.P.K.Polymers-க்கு வாதி எழுதிக் கொடுத்த கணக்கு வழக்கு என்றும், ஆனால் மேற்படி ஆவணம் முறையான கணக்கு வழக்குகளோ, எந்த நிறுவனம் சம்பந்தப்பட்டது என்றோ எந்தவித குறிப்பும் கிடையாது என்றும், மேலும் அதில் யாருடைய கையொப்பமும் இல்லை என்றும், எனவே மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றும், எனவே மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யக்கோரி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4)** இந்த மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனையானது இம்மனுவை அனுமதிக்கலாமா? இல்லையா? என்பதே ஆகும்.

**5)** இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. மனு மற்றும் எதிருரை பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் அசல் வழக்கானது மேற்படி மனுதாரர்/பிரதிவாதி தரப்பு சாட்சியத்திற்காக வாய்தா ஏற்பட்டுள்ளது என்றும், தான் தனது தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்தபோது கூடுதல் ஆவணங்கள் தனது கைவசம் இல்லாத காரணத்தாலும், தான் தேடியபோது கிடைக்காத சூழ்நிலையிலும் மேற்படி ஆவணங்களை தன்னால் இணைத்து தாக்கல் செய்ய இயலவில்லை என்றும், எனவே தற்போது கிடைக்கப் பெற்ற ஆவணங்களை காலதாமதமாக தாக்கல் செய்துள்ளதை ஏற்றுக்கொண்டு வழக்கை மேல் நடத்த வேண்டுமென்று வாதிடப்பட்டது. மாறாக மனுதாரர்/பிரதிவாதி இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள 1-வது ஆவணமானது தமிழ்நாடு விற்பனை வரி பதிவுச் சான்றிதழ் என்றும், மேற்படி பதிவுச் சான்றிதழானது கடந்த 2007-ம் வருடம் M.P.K.Polymers என்ற பெயரில்

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.08.11 18:04:27 +0530

பதிவு செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழ் என்றும், மேற்படி M.P.K.Polymers-க்கும் அசல் வழக்கின் வாதி மற்றும் பிரதிவாதிக்குமிடையே எந்தவித சம்பந்தமும் கிடையாது என்றும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள 2-வது ஆவணமானது M.P.K.Polymers-க்கு வாதி எழுதிக் கொடுத்த கணக்கு வழக்கு என்றும், ஆனால் மேற்படி ஆவணம் முறையான கணக்கு வழக்குகளோ, எந்த நிறுவனம் சம்பந்தப்பட்டது என்றோ எந்தவித குறிப்பும் கிடையாது என்றும், மேலும் அதில் யாருடைய கையொப்பமும் இல்லை என்றும், மேற்படி ஆவணங்கள் இவ்வழக்கிற்கு ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றும், எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

**6)** இந்நிலையில் மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படாத நிலையில் மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இடை நிலை மனு அனுமதிக்கப்பட்டு எதிர்மனுதாரர்/வாதிக்கு அசல் வழக்கில் மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் குறித்து உரிய வகையில் ஆட்சேபனை செய்ய வாய்ப்பு இருப்பதாலும், குறிப்பாக இம்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் இம்மனு குறிப்பிடும் ஆவணங்கள் இவ்வழக்குச் சங்கதிகளுக்கு தொடர்புடையதாக இருப்பதாலும், அதிலும் குறிப்பாக இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்/வாதிக்கு எவ்வித பாதிப்பும் ஏற்பட வாய்ப்பில்லை என்பதையும் கருத்தில் கொண்டும் இம்மனுவினை அனுமதிப்பதே மனு பொருண்மைகளின் பேரிலும், நீதியின்பாலும் சரியாக இருக்கும் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.08.11 18:04:34 +0530

11.08.2026

முதன்மை மாவட்ட நீதிபதி, சிவகங்கை

***முடிவாக,*** இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு நேரில் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, அதன் பின் என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 11-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.08.11 18:04:42 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
சிவகங்கை.

**<u>மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு</u>**
**<u>சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u> :- இல்லை.**

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.08.11 18:04:47 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
சிவகங்கை.